முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1058

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.08.2022, திங்கட்கிழமை

1. ஞான வேள்வி கொண்ட அரங்கனே
ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
தான தர்மபலம் கூட்டி
தரணி காத்திடும் மாதவராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சுபகிருது யாளி திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 06 நாள், 22.08.2022 திங்கட்கிழமை)
3. தன்னிலே அரங்கனின் தர்மமே
தரணியை மீட்டு காத்தருளும்
அண்ணல் தரும் ஞான உபதேசமே
அன்பர்கட்கு அழியாமை தந்தருளும்
4. அருளாக அருளமுதாக அரங்கன் தருகின்ற அனைத்து அன்னதான சேவைகளும்
உலகத்தின் இருளை போக்கி வழி நடத்தும்
உலகமெங்கும் அமைதி பாதுகாப்புக்குண்டான
உயர்வான வழிகளை தந்து காத்தருளும்
5. அருளவே அரங்கன் தரும் தீட்சை
அன்பர்களை ஞான வாழ்வில் எந்த சோடையும் இல்லா
வரமென காத்தருளும் வல்லமையான
வடிவேலன் என் சக்தியாகும்
6. ஆகவே தீட்சை பெற்று ஞானவழி
அரங்கன் காட்டும் சன்மார்க்க சுத்த நெறிவழி
மாட்சிமை பட உலகோர்
மனமுவந்து சரணாகதி கொண்டு
7. சரணாகதி கொண்டு தொடர்ந்து வரவர
சத்திய யுகம் ஞான யுகம்
போற்றுகின்ற வண்ணம் ஆறுமுகன் என் தலைமை கொண்ட
ஆற்றல்மிக்க ஞான சித்தர் காலமும் ஞான ஆட்சிக்காலமும் இனிதே உருவாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–